# <u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
பேரூர் மற்றும் சிங்காநல்லூர்
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

<u>ந.க.எண் : 6785 / 2009 / எம்சி. 8 நாள் : 11 .7.2009</u>

<u>அய்யா /அம்மா,</u>

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 14.07.2009 செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம்
## ஜுலை 2009

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| **1** | **Jnnurm – திட்ட செயலாக்க அலகு மற்றும் திட்ட மேற்பார்வை அலகு – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக.** |
| **2** | **பொதுப்பிரிவு - உயர்நீதி மன்ற வழக்கு ரிட் மனு எண். 45416/2006-ன் மீதான மேல் முறையீட்டு ரிட் மனு எண். 594/2007- அரசு கூடுதல் வழக்கறிஞர் மற்றும் அரசு வழக்கறிஞருக்கான வழக்கு கட்டணம் செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக.** |

**இணைப்பு -1**

**நன்றியுரை**

அ) **திருக்குறள்**

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு.**

(குறள் -612)

**விளக்கம்**

எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அதனை முழுமையாகச் செய்து முடிக்க வேண்டும். இல்லையேல் அரைக்கிணறு தாண்டிய கதையாகி விடும்.

திருவள்ளுவர்.

---

**ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

பொருள் எண் 1

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ், கோவை மாநகராட்சியில் முதற்கட்டமாக ரூ.470.58 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டம், திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் மற்றும் நகர்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் திட்டம் (பகுதி I மற்றும் II) ஆகிய பணிகளை மேற்பார்வையிட்டு, திட்டத்தினை செயல்படுத்த கீழ்க்குறிப்பிட்டுள்ள 52 எண்ணிக்கையிலான பணியிடங்களை கூடுதலாக மாநகராட்சியில் தோற்றுவிக்க, தமிழக அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் (2டி) 105, நாள்: 26.06.2007–ல் அனுமதி அளித்துள்ளது. இதன் அடிப்படையில் மாநகராட்சியின் மூலம் சில பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டும், நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகத்துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறையிலிருந்தும் அயற்பணி அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்தவும், மேற்படி பணியிடங்களுக்கான செலவினம் ரூ.95.39 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டது. புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 52 பணியிடங்களில் கீழ்ண்டவாறு தற்போது 30 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டும் 22 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் காலியாக உள்ள விபரம்:

| வ. எண் | பணியிடம் | கூடுதலாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | காலி இடங்களின் எண்ணிக்கை | வருடாந்திர செலவினம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | கண்காணிப்பு பொறியாளர் | 1 | 1 | – | 3.91 |
| 2 | செயற்பொறியாளர் | 2 | 2 | – | 6.12 |
| 3 | உதவி செயற்பொறியாளர் | 4 | 2 | 2 | 10.52 |
| 4 | உதவி / இளநிலை பொறியாளர் | 8 | 7 | 1 | 16.80 |
| 5 | வரைவு அலுவலர் | 4 | 2 | 2 | 7.24 |
| 6 | தொழில்நுட்ப உதவியாளர் | 16 | 6 | 10 | 23.20 |
| 7 | கணக்கு அலுவலர் | 1 | 1 | – | 2.10 |
| 8 | கண்காணிப்பாளர் | 2 | 2 | – | 3.62 |
| 9 | உதவியாளர் | 4 | 4 | – | 5.00 |
| 10 | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் | 2 | 2 | – | 2.02 |
| 11 | புள்ளி விவர குறிப்பாளர் (கணினி) | 2 | – | 2 | 2.02 |
| 12 | உதவி திட்ட அமைப்பாளர் | 1 | 1 | – | 1.81 |
| 13 | நகர திட்ட அலுவலர் | 1 | 0 | 1 | 2.63 |
| 14 | மண்டல திட்ட அலுவலர் | 4 | – | 4 | 8.40 |
| | மொத்தம் | 52 | 30 | 22 | 95.39 |

மேற்கண்டவாறு தோற்றுவிக்கப்படும் புதிய பணியிடங்களுக்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடப்படும் தொகையினை, மத்திய நகர்புர வளர்ச்சித்துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்புக்குழுவின் ஒப்புதல் பெற்று, அமைக்கப்படும் திட்ட செயலாக்க (Project Implementation Unit) குழுவிற்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம் என முன்நடவடிக்கையின் பேரில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு நாளது தேதி வரை தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் பணியாற்றி வருகிறார்கள். மேலும் மேற்குறிப்பிட்ட அரசாணையில் அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டிற்கு மட்டுமே பணியிடங்களை தோற்றுவித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள பணியிடங்களின் பணிக்காலம் 25.06.2009—ல் முடிவடைந்தது. இந்நிலையில் இம்மாநகராட்சியில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டப் பணியினை ரூ. 377.13 கோடி மதிப்பில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் வழங்கியதையடுத்து, தமிழக அரசின் நிர்வாக அனுமதி 24.10.2007—ல் வழங்கப்பட்டது. இத்திட்டப்பணியின் ஆறு சிப்பங்களுக்கு ஒப்பந்த விலைபுள்ளிகள் கோரப்பட்டதில் சிப்பம் IV, V பணிகள் நடைபெற்று வருகிறது. சிப்பம் I, II மற்றும் III பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் கோவை மாநகராட்சியின் மூலம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்ட பணிகள் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள திட்ட பணிகளை திறம்பட மேற்கொள்ள தேவைப்படும் 152 எண்ணிக்கையிலான கூடுதல் பணியிடங்களை தோற்றுவிக்க வேண்டியும், அதில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை மூலமாக முதற்கட்டமாக தோற்றுவிக்கப்பட்ட 52 பணியிடங்கள் தவிர மீதமுள்ள 130 பணியிடங்களை புதியதாக தோற்றுவிக்க அனுமதி கோரி, பிரேரணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மூலமாக மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசின் நகர்புர வளர்ச்சி துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு தனது 29.12.2008—ம் தேதிய 62வது கூட்ட நடவடிக்கையில் கீழ்குறிப்பிட்ட எட்டு (8) எண்ணிக்கையிலான பணியிடங்களை மட்டும் அனுமதித்தும், அப்பணியிடங்களை மாநகராட்சியில் மூன்று வருடங்களுக்கு மட்டும் தோற்றுவிக்க அனுமதி அளித்துள்ளது.

1. தகவல் தொழில் நுட்ப அலுவலர் (Information Technology Officer)
2. நகராட்சி நிதி அலுவலர் (Municipal Finance Officer)
3. பொது சுகாதார பொறியாளர் (Public Health Engineer)
4. சமூகம் மற்றும் சமுதாய மேம்பாட்டு அலுவலர் (Social and Community Development Officer)
5. நகர திட்ட அலுவலர் (Urban Planning Officer)
6. கொள்முதல் அலுவலர் (Procurement Officer)
7. சுற்றுச்சூழல் அலுவலர் (Environmental Officer)
8. மனித வள மேம்பாட்டு அலுவலர் (Human Resource Development Officer)

மேலும் மேற்கண்ட பணியிடங்களுக்கு ஊதியமாக செலவழிக்கப்படும் தொகையான ரூ.58.50 இலட்சத்தினை மத்திய அரசின் நிதியிலிருந்து முதலாம் ஆண்டு ஊதியத்தின் 100 சதவீத தொகையான ரூ.26.00 இலட்சமும், இரண்டாம் ஆண்டு ஊதியத்தின் 75 சதவீதத்தொகையான 19.50 இலட்சமும், மூன்றாம் ஆண்டு ஊதியத்தின் 50 சதவீத தொகையான ரூ. 13.00 இலட்சமும் செலவழிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியத்தொகையினை மத்திய அரசின் நிதியிலிருந்து வழங்கப்பட்டாலும் ஆறாவது ஊதியக்குழு சம்பள விகிதத்தின் படி வழங்கப்பட வேண்டிய இதர படிகள் உள்ளிட்ட கூடுதல் செலவினங்களை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கும் நிலை உள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட மேற்கண்ட பணியிடங்களில் தற்போது ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தில் பணியாற்றிவரும் அலுவலர்கள் மற்றும் மாநகராட்சியில் பணியாற்றி வரும் அலுவலர்களின் கல்வித்தகுதி மற்றும் பணி அனுபவத்தினை அடிப்படையாக கொண்டு 26.06.2009 முதல், மூன்று வருடங்களுக்கு கீழ்கண்ட பணியிடங்களில் பணியமர்த்திக் கொள்ளவும், ஆறாவது ஊதியக்குழுவின்படி ஊதியம் வழங்கவும் அரசினை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | அரசாணை எண் (2டி) எண் 105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள் 26.06.2009–ன் படி தற்போது பணியாற்றிவரும் பதவி | திட்ட செயலாக்க குழுவில் உருவாக்கப்பட்டுள்ள பதவி ( Project Implementation Unit) |
|---|---|---|
| 1 | கண்காணிப்பு பொறியாளர் (Superintending Engineer) | மனித வள மேம்பாட்டு அலுவலர் (Human Resource Development Officer) |
| 2 | செயற்பொறியாளர் (Executive Engineer) | பொது சுகாதார பொறியாளர் (Public Health Engineer) |
| 3 | செயற்பொறியாளர் (Executive Engineer) | சுற்றுச்சூழல் அலுவலர் (Environmental Officer) |
| 4 | நகர திட்ட அலுவலர் (City Project Officer) | நகரமைப்பு அலுவலர் (Urban Planning Officer) |
| 5 | உதவி செயற்பொறியாளர் (Assistant Executive Engineer) | கொள்முதல் அலுவலர் (Procurement Officer) |
| 6 | கணக்கு அலுவலர் (Accounts Officer) | நகராட்சி நிதி அலுவலர் (Municipal Finance Officer) |
| 7 | உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) | தகவல் தொழில் நுட்ப அலுவலர் (Information Technology Officer) |
| 8 | சமுதாய அமைப்பாளர் (Community Organizer) | சமூகம் மற்றும் சமுதாய மேம்பாட்டு அலுவலர் (Social and Community Development Officer) |

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடைபெற்றுவரும் திட்டப்பணிகளின் விபரம்:

| வ.எண் | நடைபெற்று வரும் திட்டப்பணிகள் | ஒப்புதல் பெறப்பட்ட மதிப்பீட்டுத்தொகை | ஒப்பந்த மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|---|
| 1 | பில்லூர் II குடிநீர் திட்டப்பணிகள் | ரூ.113.74 கோடி | ரூ. 129.23 கோடி |
| 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் | ரூ. 98.08 கோடி | ரூ.98.08 கோடி |
| 3 | பிற்படுத்தப்பட்ட குடிசை பகுதி அபிவிருத்தி திட்டப்பணிகள் பகுதி I & பகுதி II | ரூ. 258.76 கோடி | ரூ. 258.76 கோடி |
| 4 | பாதாள சாக்கடை திட்டப்பணிகள் | ரூ. 377.13 கோடி | ரூ. 425.54 கோடி |
| | மொத்தம் | ரூ. 847.71 கோடி | ரூ. 911.61 கோடி |

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடைபெறவுள்ள பணிகளின் விபரம்:

| வ.எண் | நடைபெற உள்ள திட்டப்பணிகள் | மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால் மற்றும் இயற்கை வடிகால் மேம்படுத்தும் பணிகள்<br>பகுதி I<br>பகுதி II<br>பகுதி III | <br><br>ரூ. 226. 75 கோடி<br>ரூ. 415. 29 கோடி<br>ரூ. 389.25 கோடி |
| 2 | நீர்நிலைகள் மேம்படுத்தும் பணி மற்றும் மழைநீர் சேகரிப்பு பணி | ரூ. 127.06 கோடி |
| 3 | மாநகர எல்லைக்குள் 24 x 7 குடிநீர் விநியோக திட்டம் , கூடுதல் மேல்நிலை தொட்டிகள் கட்டும் பணி | ரூ. 90.00 கோடி |
| 4 | ஒருங்கிணைந்த சாலை மற்றும் போக்குவரத்து மேலாண்மை திட்டப்பணிகள் | ரூ. 768.17 கோடி |
| மொத்த மதிப்பீடு | | ரூ. 2016.52 கோடி |

இப்பணிகள் தவிர நகர்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் திட்டம் பகுதி III-ன் கீழ் உக்கடம் பகுதியில் 9,600 எண்ணிக்கையிலான அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி ரூ. 184.80 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இப்பணிகளை ஆய்வு செய்து, அறிக்கையினை மத்திய, மாநில அரசிற்கு அனுப்பவும் மத்திய அரசின் நகர்புர வீட்டு வசதி மற்றும் வறுமை ஒழிப்பு துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழுவின் 28.07.2008–ம் தேதிய 38வது கூட்ட நடவடிக்கையில் கீழ்காணும் பணியிடங்களை தோற்றுவிக்க அனுமதி அளித்துள்ளது. இப்பணியிடங்களில் பணியமர்த்தப்படும் தகுதியான நபர்களுக்கு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு மத்திய அரசின் நிதியிலிருந்து தொகுப்பு ஊதியத்தினை முழுமையாக வழங்க குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை | மாதாந்திர தொகுப்பு ஊதியம் |
|---|---|---|---|
| 1 | திட்ட ஒருங்கிணைப்பாளர் (Project Coordinator – Housing and Slum Development) | 1 | ரூ.30000/– |
| 2 | சமூக நல மேம்பாட்டு அலுவலர் (Social Development Officer) | 1 | ரூ.25000/– |
| 3 | வாழ்வாதார மேம்பாட்டு நிபுணர் (Livelihood Development Specialist) | 1 | ரூ.25000/– |
| 4 | ஆராய்ச்சி அலுவலர் (Research Officer) | 1 | ரூ.20000/– |
| 5 | ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் (Research and Training Coordinator) | 1 | ரூ.20000/– |

மேற்கண்ட ஐந்து (5) பணியிடங்களை தோற்றுவித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அனுப்பப்பட்ட ந.க. எண் 24545/2008/IHSDP, நாள்: 08.07.2009 கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள பணிகள், ரூ. 3112.13 கோடி மதிப்பிலான திட்ட பணிகளை செயல்படுத்தவும், மேற்பார்வை செய்து கண்காணிக்கவும் திட்ட மேலாண்மை குழு (Project Management Unit) மற்றும் திட்ட செயலாக்கக்குழு (Project Implementation Unit) ஆகியவற்றை தோற்றுவித்து ஏற்கனவே அரசால் அனுமதிக்கப்பட்ட எட்டு (8) பணியிடங்கள் தவிர்த்து மீதமுள்ள கீழ்குறிப்பிட்டுள்ள பணியிடங்களை தோற்றுவித்தால் மட்டுமே திட்டங்களை தொய்வின்றி செயல்படுத்த இயலும்.

| வ.எ | பதவியின் பெயர் | திட்டத்தின் பெயர் | | | ஊதிய விகிதம் | | | ஒரு வருட காலத்திற்கு மொத்த ஊதியத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பில்லூர் குடிநீர் திட்டம் | பாதாள சாக்கடை திட்டம் | திடக்கழிவு மேலாண்மை | ஊதியம் | ஊதிய தொகுப்பு | கிரேடு ஊதியம் | |
| 1 | செயற்பொறியாளர் | – | 1 | – | 15600–39100 | PB3 | 6600 | 2.66 |
| 2 | உதவி செயற்பொறியாளர் | 1 | 1 | 1 | 15600–39100 | PB3 | 5400 | 7.56 |
| 3 | உதவி/இளம் பொறியாளர் | 6 | 6 | 1 | 9300 – 34800 | PB2 | 4700 | 18.48 |
| 4 | வரைவு அலுவலர் | 1 | 1 | – | 9300 – 34800 | PB2 | 4400 | 3.29 |
| 5 | தொழில்நுட்ப உதவியாளர் | 6 | 6 | 2 | 5200–20200 | PB1 | 2800 | 10.56 |
| 6 | கணினி புள்ளி விவர தொகுப்பாளர் | 1 | 1 | – | 5200–20200 | PB1 | 2000 | 1.73 |
| 7 | கண்காணிப்பாளர் | – | 1 | – | 9300–34800 | PB2 | 4300 | 1.68 |
| 8 | உதவியாளர் | 1 | 1 | 1 | 5200–20200 | PB1 | 2400 | 0.96 |
| 9 | இளநிலை உதவியாளர் | 1 | 1 | 1 | 5200–20200 | PB1 | 2200 | 2.88 |
| | மொத்தம் | 17 | 19 | 6 | | | | 49.80 |

மேற்குறிப்பிட்டுள்ள 42 பணியிடங்களை மாநகராட்சிக்கு தோற்றுவிக்கவும் மற்றும் மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு அனுமதி அளித்துள்ள எட்டு (8) பணியிடங்களில் தற்போதுள்ள தகுதிவாய்ந்த அலுவலர்களை பணியமர்த்தி கொள்ளவும் அரசினை வேண்டிக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மத்திய நகர்புர வீட்டு வசதி மற்றும் வறுமை ஒழிப்பு துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு அனுமதி அளித்துள்ள திட்ட செயலாக்க குழுவில் (Project Implementation Unit) கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென 5 அலுவலர்களை தொகுப்பு ஊதியத்தில் பணியமர்த்தி உத்தரவிடப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தினை மாமன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) மத்திய அரசின் நகர்புற வளர்ச்சித்துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு அனுமதி அளித்துள்ள திட்ட செயலாக்க குழுவில் (Project Implementation Unit) கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென எட்டு பணியிடங்களை மூன்று ஆண்டுகளுக்கு தோற்றுவிக்க அனுமதி அளித்தும், அப்பணியிடங்களுக்கு ஊதியம் வழங்க ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 58.50 இலட்சத்தினை மாநகராட்சி பயன்படுத்திக்கொள்ள வரப்பெற்ற நடவடிக்கை விவரத்தினை மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ) மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழுவால் அனுமதிக்கப்பட்ட எட்டு (8) பணியிடங்களில் தற்பொழுது ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தில், இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்களைக்கொண்டு பூர்த்தி செய்ய அரசினை கேட்டுக்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஈ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களுக்கென மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழுவால் ஒப்புதல் வழங்கியுள்ளவாறு திட்ட செயலாக்கக்குழு (Project Implementation Unit) வின் எட்டு (8) அலுவலர்களுடன் கூடுதலாக மாநகராட்சியில் 42 பணியிடங்கள் பொருளில் குறிப்பிட்டுள்ள விவரப்படி தோற்றுவித்து திட்டப்பணிகளை செயல்படுத்தவும், கண்காணிக்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

உ) மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட எட்டு (8) பணியிடங்களுக்கு, மூன்றாண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.58.50 இலட்சத்தினை இப்பணியிடங்களுக்கான ஊதியமாக வழங்கிட மாநகராட்சி பயன்படுத்திக்கொள்ளவும், இப்பணியிடங்களுக்கு ஆறாவது ஊதியக்குழுவின் ஊதிய உயர்வின் படி அளிக்கப்படவேண்டிய ஊதியத்திற்கான கூடுதல் செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், கூடுதலாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களுக்கான செலவினத்தை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க. எண்: 10906/2008/ஜே.என்.2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 56 நாள் 14.7.2009</u>

1. அலுவலகக் குறிப்பு அ, ஆ, பதிவு செய்யப்பட்டது.

2. அலுவலகக் குறிப்பு 'இ' ஒப்புதல் வழங்கப்பட்டது.

3. கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள திட்டப் பணிகளை செயல்படுத்தவும், கண்காணிக்கவும் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு 42 பணியிடங்களுடன், திடக்கழிவு மேலாண்மை திட்ட செயலாக்கத்திற்கு பொருளில் குறிப்பிட்டுள்ள 1 உதவி / இளம் பொறியாளர் பணியிடத்துடன் கூடுதலாக 2 (இரண்டு) உதவி / இளம் பொறியாளர்கள் பணியிடங்களையும் சேர்த்து 44 பணியிடங்களை தோற்றுவிக்கவும் இப்பணியிடங்களுக்கான வருடாந்திர செலவினம் ரூ. 57.55 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

4. தற்போது மாநகராட்சியில் பணிபுரியும் இளம் / உதவி பொறியாளர்களின் வேலைப் பளுவினை கருத்திற் கொண்டு மாநகராட்சியில் உள்ள 173 குடிசைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள நகர்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதி திட்டம் பகுதி I, பகுதி II மற்றும் பகுதி III பணிகளில், பயனாளிகளால் கட்டப்படும் வீடுகள் மற்றும் மாநகராட்சியால் கட்டப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை ஆய்வு செய்யவும், பயனாளிகளுக்கு உரிய மானியத் தொகையினை கணக்கிட்டு வழங்கவும், குடிசைப் பகுதிகளில் மாநகராட்சியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள அடிப்படை வசதி திட்டப் பணிகளை ஆய்வு செய்ய கூடுதலாக 16 எண்ணிக்கை இளம் /உதவி பொறியாளர்கள் மாநகராட்சியில் பணியிடங்களை தோற்றுவிக்கவும், இப்பணியிடங்களை மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் தகுதி வாய்ந்த பணியாளர்களை பதவி உயர்வு அளித்து பணியமர்த்தயோ அல்லது அயற்பணி மூலம் பிற துறைகளிலிருந்து பணியமர்த்தியோ இத்திட்டத்தினை செம்மையாக செயல்படுத்த அரசினை கேட்டுக்கொள்ளவும் மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது. இப்பணியிடங்களுக்கு வருடாந்திர உத்தேச செலவினம் ரூ.27.00 இலட்சம் ஆகுமென்பதால் இச்செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

5. மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட மூன்று ஆண்டுகளுக்கு 8 (எட்டு) பணியிடங்களுக்குண்டான ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊதியத்தொகை ரூ. 58.50 லட்சத்திற்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் வாா்டு தலைவா் தோ்தலை எதிா்த்து, சென்னை உயா்நீதி மன்றத்தில் தொடா்ந்த வழக்கு ரிட் மனு எண். 45416/2006-ன் மீதான இடைக்கால உத்திரவினை எதிா்த்து, கோவை மாநகராட்சி சாா்பில் தொடரப்பட்ட ரிட் மேல் முறையீட்டு மனு எண். 594/2007-ல் மாநகராட்சி சாா்பில் ஆஜரான திரு. பி.எஸ். ராமன், அரசு கூடுதல் வழக்கறிஞருக்கான வழக்கு கட்டணம் ரூ. 75,000/- மற்றும் திரு. கே. இளங்கோ, அரசு வழக்கறிஞருக்கான வழக்கு கட்டணம் ரூ. 25,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 66691/2006/எம்.சி. 10

**மாநகர மன்ற தீா்மனம் எண் 57 நாள் 14.7.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி